திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஓட்டல் தொழிலாளர்கள் பக்ஷீஸ் பெறுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பக்ஷீஸ் பெறுகிற பழக்கம் சில மேல் நாடுகளில் எப்படியிருக்கிறது என்று கேட்டால் ஓட்டல்காரர்கள் அதை உணவோடு சேர்த்து வசூல் செய்து விடுகிறார்கள். அதற்கு ஒத்த முறையிலே நம்முடைய சுற்றுலா வாரியத்தின் மூலம் நடத்தப்படுகிற ஓட்டல் களில் அப்படி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மேல் நாட்டைப் போலவே இந்த நாட்டிலேயும் தனிப்பட்டவர்களிடத்திலிருந்து வசூல் செய்து கொடுக்கிற பழக்கம் ஸ்டார் ஓட்டல்களில் இருக்கிறது. எல்லா நாடுகளிலேயும் ஒரே மாதிரியான நிலைமைதான். மற்ற ஓட்டல்களில் அவர்களாகவே தந்து விட்டுப் போவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்குக் குடியிருப்பு

* 595 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் அலுவலர்களுக்கு வாரியத்தின் மூலம் வாடகைக்கு வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்கு வாடகைக்கு வீடு கட்டித்தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் அலுவலர்களுக்கென தனியாக எந்த ஒரு திட்டமும் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Government aware that for the houses allotted on rental basis the employees of the Housing Board are charged rent much higher than the rent for the same type of houses by the public ? If the public paid Rs. 10 for a house the Housing Board employee for a similar house has to pay Rs. 25. Is the Government aware of this ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, என்னிடத்தில் இது பற்றிய குறிப்பு இல்லை. இருந்தாலும் அவர் சொல்கிறபடி வாடகை வாரி யத்தில் அதிகமாக வசூலிப்பதாக எந்தவிதமான தகவலும் எனக்கு இல்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தால் தீட்டப்பட்டுள்ள திட்டங்கள் நகரப் பகுதிகளிலே இருப்பவர்களுக்குப் பயன்

தரக்கூடிய அளவிலே இருக்கிறது. ஆகவே, கிராமப் பகுதியிலுள்ள தாழ்த்தப் பட்டவர்களாக, விவசாயக் கூலிகளாக இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசு ஏற்க முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கிராமங்களிலும் வீடுகள் கட்டித் தருவதற்கு வீட்டு வசதி வாரியம் முன் வந்திருக்கிறது. நேற்றுகூட புழல், கதிர்வேடு கிராமங்களில் 2,500 ரூபாயில் மாடல் வீடுகளை வீட்டு வசதி வாரியம் கட்டிக் காட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த வீடு கட்டும் வாரியத்தில் இருக்கிற அலுவலர்கள் தங்களுக்கு ஹையர் பர்சேஸ் மூலமாக வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறார்களா, அப்படியானால் அரசாங்கம் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வாரியத்திலிருந்து அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் இல்லை. எல்லோருக்கும் தருவது போல அவர்களையும் இந்தத் தவணை முறைத் திட்டங்களில் சேர்த்துக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: When the public is given subsidised rent of Rs. 10 the employees of the Housing Board and Slum Clearance Board, etc., are charged on the basis of house rent allowance, etc., which is much more than the subsidised rent. Is the Government aware of that ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சப்சிடைஸ்டு ரெண்டு என்பது குடிசை மாற்று வாரியத்தில் இருப்பவர்களுக்குத் தரப்பட்டிருக் கிறது. வீட்டு வசதி வாரியத்தில் இருக்கிற, சம்பளம் பெறுகிற அலுவலர் களுக்குத் தர முடியும் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட் டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]